
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 11 ஜீலை - 1998 இதழ் - 7




வெளியிடுவோர்

**காங்கயம் கிறிஸ்துவின் சபையார்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் :- மணல்மேடு வீதி, ஈரோடு - 638 002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30-11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00-12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30-6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15-8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00-9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


1. நான் கிறிஸ்துவைப் பற்றியும், சபையைப் பற்றியும் சொல்கிறேன் 1
2. தேவனுடைய சட்டங்கள் 8
3. சபைக் கொள்கை 15
4. நான் ஏன் கிறிஸ்துவின் சபையிலிருக்கிறேன் 19
5. இயேசு : மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி 21
6. இச்சையடக்கம் 23
7. ''மீகா'' தீர்க்கனின் புத்தகம் 26
8. நீ ஏன் ஜெபிக்க வேண்டும்? 27

# THIRUMARAI AASAAN

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C.CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 11 JULY-1998 Issue - 7


ஆசிரியர் உரை

## "நான் கிறிஸ்துவைப் பற்றியும், சபையைப் பற்றியும் சொல்கிறேன்"

"அழகு" என்பது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. அழகுக்கு அடிபணியாதவர் அறவே இல்லையென்று அடித்துச் சொல்லலாம். ஒருவேளை அவர்கள் எக்காலத்தில் வாழ்ந்திருந்தாலும் இதுதான் நிலை. தாவீது அரசன் இயற்கையின் அழகைக் கண்டு பிரமித்து இவ்விதம் எழுதியுள்ளார். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங். 19 : 1). அநேகராகிய நாம் பார்வையில் படுகிறவைகளில் தான் அழகு உண்டு என்று பொதுவாக எண்ணுகிறோம். ஆனால், அறிவும் விவரமும் நிறைந்தவர்கள், 'கேட்கின்ற வார்த்தைகளிலும்' படிக்கின்ற எழுத்துக்களிலும் 'அழகு' உண்டு என்பதை அறிந்து வைத்துள்ளனர். வாசிப்பதை மனமாற நேசிப்பவர்களும், பேசுவதைக் கூர்ந்து கவனிப்பவர்களும் தான் இவ்வகை அழகைக் கண்டு ரசிக்க முடிகிறது. மற்றவர்களுக்கு இது விளங்குவதில்லை.

அதுபோலவே, உன்னத தேவனின் வார்த்தைகள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தைப் பற்றோடு படிப்பவர்களுக்குத் தான், அதன் அழகு பளிச்சென்று தெரியும். மற்றவர்களுக்கு அதன் அழகு தெரிவதுமில்லை, மேன்மை புரிவதுமில்லை. இங்கே தாவீதின் வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள். "தேவனுடைய வார்த்தைகள் பொன்னிலும், மிகுந்த பசும்

பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதாயும் இருக்கிறது" (சங். 19 :10). தேவனுடைய வார்த்தையின் அழகை தாவீது எந்தளவுக்கு ரசித்து, ருசித்து எழுதியுள்ளார் பாருங்கள். அழகான தேவனுடைய வார்த்தைகளுக்கு மேலும் அழகூட்டக்கூடிய சில சிறந்த பகுதிகள் வேதாகமத்தில் உண்டு என்பது வேதத்தைத் தியானித்து, ஆராய்ந்து படிப்பவர்களுக்கு நன்கு விளங்கும். இதற்கு ஆதாரமாக, அநேக வேத பகுதிகளை நாம் அடுக்க முடியும். அவைகளில் ஒன்று தான் எபேசியருக்கு எழுதின நிருபம் 5ம் அதிகாரம் வசனங்கள் 22 முதல் 32 முடிய.

இப்பகுதியில் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவின் மேன்மை வெகு நேர்த்தியாக விவரிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை இப்பகுதியை வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்திய நபர் திருமண உறவின் உண்மையை அனுபவ ரீதியில் அறியாதவராக இருந்தாலும், கல்வியறிவோடு கூடிய தனது கற்பனை வளத்தை முழுமையாகப் பயன்படுத்தி, குறையேதுமில்லையென்ற அளவில், கிறிஸ்து, தனது மணவாட்டியாகிய சபையின் மீது வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தியுள்ளார். அழகுமிகு இவ்விவரிப்பின் இறுதிப்பகுதியில் தான் நமது தலைப்பிற்கான வார்த்தைகள் இடம் பெற்றுள்ளது."..... நான் கிறிஸ்துவைப் பற்றியும் சபையைப் பற்றியும் சொல்கிறேன்"என்று.

அப்போஸ்தலன் பவுல் இவ்வசனப் பகுதியில் கிறிஸ்து பற்றியும், சபை பற்றியும் பேசியுள்ளார் என்பதை நாம் கவனமாகக் கவனித்து, இதிலிருந்து சில பாடங்களை நமக்காக கற்றுக் கொள்வோம்.

## I. நாமும் கிறிஸ்துவைப் பற்றிப் பேச வேண்டும் :

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படியாக வந்த இயேசுக் கிறிஸ்து, தன்னைப் பற்றிய செய்தியை உலக மக்கள் அனைவருக்கும் அறிவிக்க ஒரு குறிப்பிட்ட முறையைப் பின்பற்றுங்கள் என்று கட்டளையிட்டார். மத்தேயு 28ம் அதிகாரத்தின் இறுதியில் உள்ள அந்தப் பிரதான கட்டளை"... உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று சொல்கிறது. அதாவது உலகெங்கும் போய் நற்செய்தியைச் சொல்லுங்கள் என்றார். அவருடைய அப்போஸ்தலர்கள் இக்கட்டளையைச் சிரமேற்கொண்டு செயல்பட்டபடியால் தான், இனிச் சுவிசேஷம் அறிவிக்க இடமில்லையென்று சொல்லுமளவுக்கு காரியமாற்ற முடிந்தது. பவுலடியார் கெலோசேயருக்கு எழுதும்போது, "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது ...." என்று கூறியுள்ளார். (1 : 23).

ஏதோ கட்டளையை நேரிடையாகப் பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள் மாத்திரம் தான் கிறிஸ்துவைப் பற்றிப் பேசி

பிரசங்கித்தார்கள் என்று எண்ண வேண்டாம். கிறிஸ்துவில் விசுவாசிகளாயிருந்த அனைவரும் இப்பணியைச் செய்துள்ளனர். முதல் நூற்றாண்டுக் காலத்தில், எருசலேமில் இருந்த ஆதித் திருச்சபைக்கு மிகுந்த துன்பம் வந்தபோது, சிதறிப்போன அனைவருமே நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்துள்ளனர். (அப். 8 :1-4). அதாவது, கிறிஸ்துவைப் பற்றிப் பேசியுள்ளனர். கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவை பற்றி மற்றவர்களுக்கு மிகுந்த துன்பத்திற்கு மத்தியிலும் சொல்லியுள்ளனர்.

சரி, நம்முடைய நிலை என்ன? நாம் என்ன செய்து கொண்டுள்ளோம்? அப்போஸ்தலர்களும், ஆதித் திருச்சபை மக்களும் தங்களுக்கு இட்ட பணியை செவ்வனே செய்திருக்கும் போது, நாம் என்ன செய்யப் போகிறோம்? 'அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறது போல . . ." என்று நாம் கொலோ. 1 : 13-ல் காண்கிறோம். பவுலையும், சீலாவையும் குறித்து வைராக்கியங்கொண்ட யூதர்கள் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்று, குறிப்பிட்டுள்ளனர், (அப். 17 : 6). இதிலிருந்து வானத்தின் கீழும், உலகெங்கிலும் சுற்றித் திரிந்து ஆதித் திருச்சபையினர் நற்செய்திப் பணியாற்றியதை நாம் காணமுடிகிறது.

கொஞ்ச எண்ணிக்கையிலிருந்தவர்கள் உலகையே கலக்குமளவிற்கு நற்செய்தியைச் சொல்லும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் வேலையைச் செய்திருக்கும் போது, நம்மால் நம்முடைய சமுதாயத்தைக் கூடத் தொட முடிவதில்லையே ஏன்? சிந்திப்போம். இதிலே ஒரு இரகசியமும் இல்லை. உண்மை வெளிப்படையானது. நாம் கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவதுமில்லை, அடுத்தவர்களுக்குச் சொல்வதுமில்லை. புரிகிறதா? பிரச்சினை என்னவென்று,

நற்செய்தி அறிவிக்கும் பணி பிரத்யேகமாக நியமிக்கப்பட்ட மனிதர்களின் வேலையென்றும், கை நீட்டிச் சம்பளம் பெறுகிறவர்களின் பணி என்றும் எண்ணுகிறீர்களா? அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் எருசலேம் சபை விசுவாசிகளுக்கு என்ன சம்பளம் கிடைத்தது? அடியும், உதையும் வேதனையும் தான் கிடைத்தது. ஒருவேளை நமக்கு இவைகளெல்லாம் கிடைக்காததால் தான் 'சொல்லாமல்' இருக்கிறோமா? சந்தேகமாகத்தான் இருக்கிறது.

அன்பர்களே, கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்லும் பணியை நாம் உடனே ஆரம்பிப்போம். கிறிஸ்தவம் ஒரு போதிக்கும் மார்க்கம். உயிர்த்தெழுந்த இயேசுவை, அநேகர், மரித்து கல்லறைகளில் படுத்துக் கொண்டிருக்கும் மகான்களில் ஒருவராக எண்ணிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கெல்லாம் நாம் கிறிஸ்து யாரென்பதை அறிவித்தாக வேண்டும்.

'இயேசுக் கிறிஸ்து தேவனுடைய ஒரே பேரான குமாரனென்றும்' 'அவரை விசுவாசிப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்றும்', 'சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கின்ற கிருபாதார பலி' அவரே என்றும் நாம் சொல்ல வேண்டும். சொல்லுவோமா? அப்போஸ்தலன் பவுல் போல் கிறிஸ்துவைப் பற்றி வைராக்கியமாக பிரசங்கிப்போம்.

## II. நாமும் சபையைப் பற்றிப் பேச வேண்டும் :

சபையைப் பற்றிப் பேசுவதே பாவம் என்று நினைக்குமளவிற்கு கிறிஸ்தவ சமுதாயத்தின் தரம் தாழ்ந்துவிட்டது. இது ஒரு கசப்பான உண்மை. பெரும்பாலானவர்கள் எண்ணுவது போல், சொல்வது போல், சபையைப் பற்றிப் பேசுவதே பாவமானால், முன்னோடி அப்போஸ்தலர்களான பேதுருவும், பவுலும் தங்கள் ஊழியத்ததின் நாட்களிலெல்லாம் பாவம் செய்திருக்கிறார்கள் என்று தான் பொருள். இக்கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? இது உண்மையானால், பாவியாகிய பவுலுக்கு எப்படி பரிசுத்த ஆவியானவரின் அங்கீகாரம் கிடைத்தது? பாவியாகிய பவுலாலே வாடாத ஜீவகிரிடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று எப்படி நம்பிக்கையோடே சொல்ல முடிந்தது? மருந்துக்காகிலும் கொஞ்சம் சிந்திப்போம்.

சபை என்ற வார்த்தைக்குப் பொருள்கூடத் தெரியாதவர்களெல்லாம் இன்றைக்குத் தங்களை தேர்ந்த கிறிஸ்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பது வேதனையிலும் வேதனை. சபை என்றால் கட்டிடம் என்று அநேகர் எண்ணிக்கொண்டுள்ளனர். இக்கருத்து, அடிமனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறபடியால் தான், சபையைப் பற்றிப் பேசினால் கோபம் கொப்பளித்துக் கொண்டு வருகிறது. கட்டிடத்தில் என்னய்யா இருக்கிறது? கட்டிடமா ஒருவனை இரட்சிக்கிறது என்று ஆவேசப் படுகின்றனர். இருதயம் தான் முக்கியம் என்று எதிர்வாதம் செய்து தங்கள் அறியாமையை, தங்களையுமறியாமல் வெளிப்படுத்துகின்றனர்.

'சபை' என்ற வார்த்தையின் பொருள் அழைக்கப்பட்டவர்கள், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்பதாகும். அதாவது, சபை என்பது கட்டிடத்தை ஒருபோதும் குறிப்பதில்லை. அது மக்களைத்தான் குறிக்கிறது. இந்த உண்மையை அறிந்துகொண்டால் சபை, முக்கியமல்ல என்று சொல்வது தவறென்று விளங்கும்.

இயேசுக்கிறிஸ்து, தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி சபையைச் சம்பாதித்தார் என்று அப். 20:28-ல் பார்க்கலாம். அதாவது, சபைக்காக தனது உயிரைக் கொடுத்துள்ளார் என்று. சபை என்பது கட்டிடமானால், இயேசு கிறிஸ்து, கட்டிடத்திற்கு உயிரைக் கொடுத்தார் என்று தான் அர்த்தம்.

கட்டிடத்திற்காகவா உயிர் நீத்தார்? இல்லவே இல்லை. ஜனங்களுக்காகத் தான். ஆம், உலக மக்களுக்குத் தான் ரத்தம் சிந்தினார்.

சபையைப் பற்றிப் பேசினால் கணிசமான பேருக்கு கோபம் வருவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சபை என்பதும் இராஜ்யமும் ஒன்று தான் என்ற உண்மை விளங்காமலிருப்பது. ஏசாயா 2 : 2,3, தானியேல் 2 : 44 ஆகிய வசனங்களில் தீர்க்கதரிசிகள் முன்னுரைத்ததும், யோவான் ஸ்நானகனும், இயேசுக் கிறிஸ்துவும் "**மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது**" என்று பிரசங்கித்து முன் அறிவித்ததும் இந்த "சபை" பற்றித்தான். பெரும்பாலானவர்கள் எண்ணுவது போல "பரலோக ராஜ்யம்" என்பது "பரலோகம்" அல்ல. பரலோக ராஜ்யம் என்பது கண்டிப்பாக சபை தான். இதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள மத். 16 : 18, 19 வசனங்களை கவனமாகப் படியுங்கள்.

இப்பொழுது சொல்லுங்கள் சபையைப் பற்றிப் பேசலாமா, பேசக் கூடாதா? சபை முக்கியமா அல்லது இல்லையா? ஒருவேளை, சபை முக்கியமில்லையானால், தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசியது தேவையில்லாத ஒன்றா? யோவான் ஸ்நானகனும், இயேசுக் கிறிஸ்துவும் முக்கியமற்ற ஒன்றைக் குறித்துப் பேசி பிரசங்கம் செய்தார்களா? இயேசுக் கிறிஸ்து, ". . . . . இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடு வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று மாற்கு 9 : 1-ல் வாக்குத்தத்தம் செய்தது பித்தலாட்டமா? சொல்லுங்கள்.

முக்கியமற்ற ஒன்றைக் குறித்து வேதாகமம் ஏன் இவ்வளவு பேச வேண்டும்? வேதாகமம் ஒருபோதும் தவறாகாது. ஆகவே "சபை" மிகவும் முக்கியமானது தான். இயேசுக் கிறிஸ்து வந்ததும், பிரசங்கித்ததும், மரித்ததும், உயிர்த்ததும், மீண்டும் வரப்போவதும் சபைக்காகத்தான். ஆம், வரப்போவதும் சபைக்காகத் தான், கவனியுங்கள் இவ்வசனத்தை, "அதன் பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார். (I கொரி. 15 : 24).

இவ்வளவு அழுத்தம் திருத்தமாக வேதாகமம் சொல்லும் சபை ஒன்றே ஒன்று தான். எபே. 4 : 4 ஒரே சரீரம் என்று பார்க்கிறோம். சரீரம் என்பதும் சபை தான் என்பதை எபே. 1 : 23-ல் தெரிந்து கொள்ளலாம். "எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகியசரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்". பரலோக பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் அந்த ஒரு சபைக்குள் இருக்க வேண்டியது மிக அவசியம். இப்பேருண்மை தெரியாமல்

உலக மக்களும், குறிப்பாக கிறிஸ்தவ சமுதாயமும் தடுமாறிக் கொண்டுள்ளது.

இதை எல்லோருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டியது, மெய்க் கிறிஸ்தவர்களின் கடமை. அப்போஸ்தலன் பவுல் தனது கடமையை உணர்ந்தபடியால் தான் சபையைப் பற்றிப் பேசி பிரசங்கித்துள்ளார். நாமும், உண்மையான சபை ஒன்றே ஒன்று தான் என்றும், அந்த ஒரு சபைக்குள் இருந்தால் தான் பரலோகம் செல்லமுடியுமென்றும் மற்றவர்களுக்குச் சொல்லுவோம். அந்தச் சபையின் பெயரும் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" என்று (ரோம. 16 : 16).

## III. கிறிஸ்துவையும், சபையையும் பிரிக்க முடியாதென்பதை நாமும் சொல்ல வேண்டும்

மேலும், ஒரு உண்மையை நாம் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஏனெனில், கிறிஸ்து தான் முக்கியம், சபை முக்கியமல்ல என்றும், கிறிஸ்துவுக்கும் சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும் எண்ணிக் கொண்டுள்ளனர்.

எபேசியருக்கு எழுதின நிருபம் 5ம் அதிகாரத்தில் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் இடையே உள்ள உறவை அடிப்படையாக வைத்து கணவன், மனைவி உறவு விவரிக்கப்பட்டுள்ளது. இதன் பொருள் கணவன், மனைவி இடையே இருக்கும் நெருக்கம் தான் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள நெருக்கமாகும். சிருஷ்டி கர்த்தாவால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமண உறவு, அதாவது கணவன், மனைவி உறவு பிரிக்கப்படமுடியாத ஒன்றாக இருக்க வேண்டுமென்று தான் அழகான ஒரு வசனத்தை தேவன் கொடுத்துள்ளார். இதோ அந்த வசனம். "ஆகையால் தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக் கடவன்" (மத். 19 : 6). தேவனால், பிரிக்கப்படக்கூடாது என்று கட்டளையிடப்பட்டிருக்கும் உறவு கணவன், மனைவி உறவு. அந்த உறவு கிறிஸ்துவுக்கும், சபைக்கும் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இங்கே கணவனும், மனைவியும் பிரிக்கப்படக்கூடாதென்பது தேவ கட்டளையானால், கிறிஸ்துவும், சபையும் பிரிக்கப்படக்கூடாதென்பதும் தேவ கட்டளைதானே. கிறிஸ்துவுக்கும், சபைக்கும் சம்பந்தமில்லையென்று நாம் சொல்வோமானால், அது தேவ கட்டளையை மீறுவதாகாதா?

கிறிஸ்துவுக்கும் சபைக்கும் உள்ள உறவை புரிந்து கொள்வதில் இன்னும் சிரமம் இருக்குமானால், தொடர்ந்து கவனியுங்கள். எருசலேமில் இருந்த சபையைத் துன்பப்படுத்தின கலகக் கும்பலுக்குத் தலைமையேற்ற சவுலை, தமஸ்கூ செல்லும் நெடுஞ்சாலையில் இயேசு சந்தித்துச் சொல்வதைக் கேளுங்கள். "சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்". "நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" (அப். 9 : 4, 5). அவர் ஒருபோதும்

கிறிஸ்துவவை துன்பப்படுத்தவில்லை. ஆனாலும், இயேசு சவுலைப் பார்த்து, "நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" என்றார். கிறிஸ்துவும், சபையும் ஒன்று தான் என்பதற்கும், கிறிஸ்துவையும், சபையையும் பிரிக்க முடியாதென்பதற்கும் இதைவிடச் சிறந்த சான்று என்ன வேண்டும்?

ஆகையால், எனக்கு கிறிஸ்து தான் வேண்டும் அவருடைய சபை, அதாவது கிறிஸ்துவின் சபை வேண்டாமென்றும் சொல்லுவோமானால், அது கிறிஸ்துவையும் வேண்டாமென்று சொல்வதாகவே அர்த்தம். ஏனெனில் ஒருவன் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தால், அவன் கண்டிப்பாக கிறிஸ்துவின் சபைக்குள்ளாக இருக்க வேண்டும். கிறிஸ்துவின் சபைக்குள்ளாக இல்லாத ஒருவன் கிறிஸ்துவின் நற்செய்திக்கு நான் கீழ்ப்படிந்துள்ளேன் என்று சொல்ல முடியாது. அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது இக்கருத்தை ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியுள்ளதை தயவு செய்து கவனியுங்கள். " நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக (சபைக்குள்ளாக) ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம் (I கொரி. 12 : 13). நன்றாக கவனியுங்கள். ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்கள் அனைவரும் ஒரே சபைக்குள்ளாகத் தான் ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளார்கள். இவர்களெல்லாரும் எதனடிப்படையில் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்? கிறிஸ்துவின் சுவிசேஷத்தினடிப்படையில் தான். கிறிஸ்துவின் சுவிசேஷம் என்பது எது? கிறிஸ்துவின் பாடு, மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகும். அப்படியானால் கிறிஸ்துவையும், சபையையும் நாம் எப்படிப் பிரிக்க முடியும்? பிரிப்பது எப்படி நியாயமாகும்? தேவன் இணைத்ததைப் பிரிக்கிற நம்மை தேவன் எப்படி ஏற்றுக்கொள்வார்? சிந்திப்போம்.

எனவே, எனக்கு அருமையானவர்களே, நம்முடைய பொறுப்பு எவ்வளவு பெரிதாயிருக்கிறதென்று பாருங்கள். நாம் உண்மையான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருந்தால், நம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சபை பற்றியும், அதாவது கிறிஸ்துவும், சபையும் பிரிக்கப்பட முடியாதது என்பது பற்றியும் பேசுவோம். அப்போஸ்தலன் பவுல் போல் சுற்றித் திரிந்து இவ்வுண்மையைச் சொல்லுவோம்.

ஒரு வேளை, நாம் கிறிஸ்துவின் சபையைக் குறித்தும், அந்த ஒரே சபைக்குள்ளாக இருக்க வேண்டிய அவசியம் குறித்தும் இதுகாறும் அறியாமல் இருந்திருப்போமானால் உடனடியாக விரைந்து செயல்பட்டு, கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்து, கிறிஸ்துவின் சபையில் அங்கமாவோம்!

தேவன் தாமே அவர் சித்தம் செய்யும்படியாய் உங்களை ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!

# தேவனுடைய சட்டங்கள்

"பழக்கத்தின் விளைவாக நிறுவப்பட்ட அல்லது அதிகாரத்திலுள்ளவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு விதி அல்லது செயல்" என்பதே சட்டம் என்ற சொல்லுக்குப் பொருள். வேதாகமத்தில் "சட்டம்" என்ற சொல் மோசேயின் பிரமாணத்தைப் பற்றியே அதிகமாகக் குறிப்பிடுகிறது. (யோவான் 1: 17). புதிய ஏற்பாடானது சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என்று கூறப்படுகிறது. (யாக். 1 : 25). எந்தச் சட்டத்தை நாம் குறிப்பிட்டாலும், சட்டமே தேவனிடமிருந்தது தான் தெடங்கிற்று. அதன்பின் ஏற்பட்ட எல்லா சட்டங்களும், உலக ரீதியான கிராம, நகர உலகின் பல நாட்டுச் சட்டங்களும், தேவனுடைய சட்டத்தின் அடிப்படையிலேயே பொதுவாக ஏற்பட்டன.

ஆரம்பத்திலிருந்தே, மனிதனின் பாதுகாப்பிற்கான சில விதிகளைக் கொடுக்க வேண்டிய தேவை தேவனுக்கு ஏற்பட்டது. அவருடைய சட்டத்தை மீறும் போது, மேலும் அதிகமான விதிகளையும் வழிமுறைகளையும் அவைகளை மீறினால் கிடைக்கும் தண்டனைகளையும் தேவன் ஏற்படுத்தினார். காலப் போக்கில், மனித இனத்தின் விருத்திக்கு ஏற்ப, மனிதனுக்குத் தேவன் ஏற்படுத்திய சட்டங்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டன. அவனுடைய அயலாருடன் கூடிய உலகப் பூர்வமான உறவுகள் சம்பந்தமாயும், தேவனோடு அவனுக்குள்ள ஆன்மீகக் குறைவு சம்பந்தமாயும், மனிதனுடைய சொந்த நலன்களுக்காகவே இச்சட்டங்கள் ஏற்பட்டன.

பழைய ஏற்பாட்டில் இரண்டு சட்டங்கள் வெளிப்படுத்தப்பட்டன. முதலாவது சட்டம் பிதாக்களின் பிரமாணம் எனப்பட்டது. ஒரு பிதா என்பவர், ஒரு குடும்பத்தின் அல்லது வீட்டின் தந்தை அல்லது தலைவர் ஆவார். இந்தக் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின்படி தேவன் பிதாக்களுடன் பேசினார். அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடம் தேவன் அளித்த கட்டளைகள் பற்றித் தெரிவித்தனர். ஆதாம், நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோர் சில பிரபலமான பிதாக்கள் ஆவர். இந்தச் சட்டம் ஆதாமில் ஆரம்பித்து, மோசேக்கு அந்தப் பிரமாணம் கொடுக்கப்படும் நாள் வரை தொடர்ந்தது. எனவே, அது சுமார் 2500 ஆண்டுகள் நீடித்தது. எபிரேய எழுத்தர் இது பற்றிக் குறிப்பிடுகையில், "பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும்

வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்..." (எபி. 1 : 1) என்று கூறுகிறார். தொடர்ந்து, பழைய ஏற்பாட்டில் காணப்படும் இரண்டாவது சட்டமானது மோசேயின் சட்டம் அல்லது மோசேயின் பிரமாணம் எனப்பட்டது. யாத்திராகமம் 20ம் அதிகாரத்தில் பதிவு செய்துள்ளபடி, பத்துக் கட்டளைகளும் இன்னும் நன்னடத்தை சம்பந்தமான, சரீர, ஆன்மீக சம்பந்தமான பல சட்டங்களும், மோசேயுடன் தேவன் பேசியதின் விளைவாகக் கொடுக்கப்பட்டன. அது எழுதப்பட்ட ஒரு சட்டமாகும். முதலில் கற்பலகைகளிலும், பின்னர் புத்தகச் சுருள்களிலும், மக்களின் இருதயங்களிலும் எழுதப்பட்டது. அது இஸ்ரவேல் குடும்பத்தார்களுக்காகக் அல்லது தேவனின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிய யூதர்களுக்கு மட்டும் அமலாக்கப்பட்டது. கீழ்ப்படியாதவர்களுக்கு சரீர தண்டனை அளிக்கும் சட்டமாக அது கிரியை செய்தது. மோசேக்கு ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டு, கிறிஸ்துவின் மரணம் வரை அது நீட்டிக்கப்பட்டது. அதாவது, 1500 ஆண்டுகள் அது நீடித்தது. யோவான் அதைப் பற்றிக் கூறும்போது, "எப்படியெனில் நியாயப் பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவான் 1 : 17) என்றார். கிறிஸ்து சொன்னார் : " நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்க தரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." (மத்தேயு 5 : 17, 18). கிறிஸ்து கூறியது போலவே அது நிறைவேறிற்று. "மோசேயின் நியாயப் பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் செல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார்." (லூக்கா 24 : 44). நீங்கள் 2 கொரிந்தியர் 3; கொலோசெயர் 2:14; கலாத்தியர் 5:4 ஆகிய வசனங்களையும் படிக்க விரும்புவீர்கள்.

தேவனுடைய புத்தகமாகிய வேதாகமத்தில் காணப்படும் மூன்றாவதும் இறுதியுமான மற்றொரு சட்டத்தைப் பற்றி புதிய ஏற்பாட்டில் படிக்கிறோம். இச்சட்டம் கிறிஸ்துவின் பிரமாணம் எனப்படுகிறது. அது தேவனால் கிறிஸ்துவுக்கும், அப்போஸ்தலர்களுக்கும், அற்புதமாக அதை எழுதப்பணிக்கப்பட்ட வேறு சிலருக்கும் கொடுக்கப்பட்டது. அது

எழுதப்பட்ட நிலையில் இன்று நமக்கும் கிடைத்திருக்கிறது. இச்சட்டம் கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின் அமலுக்கு வந்தது. அவர் மீண்டும் திரும்பி வரும் வரை அது அமுலில் இருக்கும். உலகின் எல்லா பகுதிகளிலும் உள்ள சகல மக்களுக்கும் அது கொடுக்கப்பட்டது என்பதைக் கிறிஸ்து கூறினார் : "..... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்." (மாற்கு 16 : 15). நாம் ஏற்கனவே குறிப்பிட்ட சில வசனப்பகுதிகளுக்கு மீண்டும் செல்லும் போது, தேவன் ஆதியில் எப்படி தீர்க்கதரிசிகள் மூலமாக பிதாக்களுடன் பேசியிருந்தார் என்பதைச் சொல்லிவிட்டு, எபிரேய எழுத்தர் தொடர்ந்து சொல்லுகிறார் : "இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்." (எபிரேயர் 1 : 2). கிறிஸ்து மறுரூபமானபோது தேவன் சொன்னார் : "..... இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவிகொடுங்கள்". (மத். 17 :5). பிரமாணம் மோசேயால் தரப்பட்டது, ஆனால் கிருபையும் சத்தியமுமோ இயேசு கிறிஸ்துவால் வந்தன என்பதாக யோவான் 1 : 17ல் எழுத்தர் அறிவிக்கிறார். இதுவே சுயாதீனம் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என யாக்கோபு 1 : 25ம் வசனத்தில் அவர் கூறுகிறார்.

எனவே, இன்று நாம், பிதாக்களின் பிரமாணத்தின் கீழ் வாழவில்லை என்று அறிகிறோம். ஏனென்றால், அந்தச் சட்டமானது மனிதத் தோற்றமுதல் 2500 ஆண்டுகளாக வசித்த மக்களுக்காகக் கொடுக்கப்பட்டது. நாம் அப்போது வசிக்கவில்லையாகையால் அது நமக்குக் கொடுக்கப்படவில்லை அல்லது நமது காலத்திற்குக் கொண்டு வரப்படவும் இல்லை. அல்லது நாம் மோசேயின் சட்டத்தின் கீழ் வாழவும் இல்லை. எனவே மோசேயின் பிரமாணம் நம்மைக் கட்டுப்படுத்தாதது. மோசே காலந் தொடங்கி, கிறிஸ்துவின் மரணம் வரையுள்ள மக்களையே அது கட்டுப்படுத்தியது. மேலும், அந்த நாட்களுக்கு நாம் திரும்பிச் செல்ல முடியாதாகையால், அல்லது அந்தச் சட்டத்தை இந்த யுகத்திற்குக் கொண்டு வர அனுமதி இல்லாததால், நம்மை அச்சட்டம் கட்டுப்படுத்தாது. அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டியதில்லை. இப்போது ஒரே ஒரு சட்டமே மீதி இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் காணப்படுவது போல அதுதான் கிறிஸ்துவின் சட்டம். இப்போது, அந்தச் சட்டம் கிறிஸ்துவின் மரணத்தில் வந்தது; கிறிஸ்து மீண்டும் வரும் வரை அது அமுலில் இருக்கும். எனவே, இந்த இரு பெரும் நிகழ்ச்சிகளுக்கும் இடையே நாம் வசித்துக் கொண்டிருப்பதால், அந்தச் சட்டம் என்னையும், உங்களையும், இன்று வாழும் சகல மக்களையும் கட்டுப்படுத்தும். நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை

அறிந்து கொள்ள, இந்தச் சட்டத்தை நாம் கற்றுக் கொள்ளவும், அதன்படி நடக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். அடிப்படையில் ஆவிக்குரிய சட்டமாக இது இருக்கிறது. ஆனால் நீதிக்கும் சரீரத்திற்கும் சம்பந்தப்பட்ட சட்டமாகவும் இது செயல்படுகிறது.

அதாவது, நாம் தேவனுடைய ஆவிக்குரிய சட்டத்திற்குக் கீழ்ப்படியும் போது, நாம் நீதியிலும் சரீரத்திலும் அதேபோல பரிசுத்தமான வாழ்க்கை வாழுவோம். அப்படிச் செய்யும்போது, தேவனுக்கும் நமது அயலாருக்கும் உள்ள நமது உறவையும் அது பலப்படுத்துகிறது.

தேவனின் எல்லா சட்டங்களும் அவைகள் கொடுக்கப்பட்ட காலத்திலும், எந்தக் காலம் வரை அவை தரப்பட்டதோ அது வரையிலும், கட்டுப்படுத்துகின்றன. மனிதனை பாதுகாக்கவும், அவனுக்கு உதவி செய்யவும், அவனை இரட்சிக்கவும் அச்சட்டங்கள் கொடுக்கப்பட்டன. அவருடைய சட்டங்களைக் கடைபிடித்தவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கின்றனர். தேவனுடைய சட்டங்களை மீறுகிறவர்களோ அதற்குரிய தண்டனையை அடைய வேண்டியவர்களாக இருந்தனர். தேவனுடைய சட்டத்தை மீறிச் செல்வதை விட அதின் எல்கைக்குள் இருக்க வேண்டிய அவசியத்தை மனிதன் அறிந்திருந்தால் அவனுக்கு எவ்வளவு நலமாக இருக்கும்? மேலும், பொதுவாக மனிதர்கள் தேவனுடைய சட்டங்களில் சீர்திருத்தம் செய்ய முயற்சிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதும், அப்படிச் செய்வதின் மூலமாக தேவனையே புறக்கணிப்பதும் எவ்வளவு வருத்தமான காரியமாக இருக்கிறது. உண்மையில், தேவனுடைய சட்டங்களில் நாம் தலையிடக்கூடாது. இவை பற்றி பல எச்சரிக்கைகள் உள்ளன. உதாரணமாக, வெளிப்படுத்தின விசேஷம் 22 : 18, 19ம் வசனங்களில், கர்த்தருடைய வார்த்தைகளோடே எதையும் கூட்டவோ அல்லது அவற்றிலிருந்து எடுத்துப் போடவோ கூடாது என்று அவர் எச்சரிப்பதைப் படிக்கிறோம்.

ஆனால் வேறு ஒரு சட்டத் தொகுப்பை நாம் கவனிக்க வேண்டும். நகரத்தின் சட்டங்கள், மக்களை ஆள ஒரு நாடு உருவாக்கும் சட்டங்கள் போன்றவை. பொதுவாக மனிதர்களுடைய சட்டங்கள் எனப்படுகிறது. ஆனால் உண்மையில் தேவனுடைய சட்டங்களிலிருந்து தான் இவை எடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, தேவனுடைய சட்டங்கள் அனைத்திலும், மனிதன் கொலை செய்யக்கூடாது, திருடக் கூடாது, பொய் சாட்சி சொல்லக்கூடாது. பிற பெண்களை இச்சிக்கக் கூடாது போன்றவற்றை அவர் சொல்லியிருக்கிறார். மனிதன் எப்படிப்பட்ட

சட்டங்களை வைத்திருக்கிறான்? அதே சட்டங்களைத் தானே! ஏன்? ஏனெனில், மனிதன் வாழ வேண்டுமானால் அடிப்படைச் சட்டங்களாகிய அவைகள் அமுலில் இருக்கவேண்டியது அவசியம். வேறு மதம் அதிகாரம் செய்து, மக்களை தனது வசம் வைத்துள்ள நாடுகளிலும் கூட, தேவனுடைய சட்டமே அவர்களை ஆளுகிறது. இது மறுக்கப்படலாம்; என்றாலும் இதுவே உண்மையாகும். தேவன் முதலில் சட்டத்தைக் கொடுத்தார். பின்னர் மனிதனை உண்டாக்கிய பிறகு, மனிதனுக்கு எப்படிப்பட்ட சட்டங்கள் தேவை என்பதை ஆதியிலிருந்தே உணர்ந்த தேவனால், இந்தச் சட்டங்கள் உலகப்பூர்வமாக, பரம்பரை பரம்பரையாக, நாடு நாடாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. எனவே, இவை தேவனுடைய சட்டங்கள். அதின் தொடர்பாக, தேவனே இந்த நாடுகளையும் உலக முழுவதையுமே அவருடைய சட்டங்கள் மூலமாக ஆளுகிறார்.

நாட்டின் சட்டங்களைப் பற்றிய மனிதக் கண்ணோட்டம் எவ்வாறு இருக்க வேண்டும்? தேவனுடைய ஆவிக்குரிய சட்டங்களுக்கு மனிதன் மதிப்பளிக்கவும் கீழ்ப்படியவும் எதிர்பார்க்கப்படுவதைப் போல, மனிதனுடைய சட்டங்கள் காரியத்திலும் அதே போன்று நடக்க வேண்டியவனாக இருக்கிறான். அதாவது, அவை அவருடைய சட்டங்களாக இருப்பின், அவருடைய விருப்பத்திற்கு ஏற்ற சட்டங்களாக இருப்பின் அவற்றிற்கு அவன் கீழ்ப்படிய வேண்டும். உதாரணமாக, பவுல் எழுதுகிறார்! " எந்த மனிதனும் மேலான அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமும் இல்லை; உண்டாயிருக்கிற 'அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கு அல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள். ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால் நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய் பிடித்திருக்கவில்லை. தீமை செய்கிறவன் மேல் கோபாக்கினை வரப் பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. ஆகையால், நீங்கள் கோபாக் கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச் சாட்சியின் நிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராய் இருக்கிறார்களே.

ஆகையால் யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனை கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணுங்கள்". (ரோமர் 13 : 1-7). பேதுரு எழுதுகிறார். "நீங்கள் மனிதருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலும் சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலும் சரி, கீழ்ப் படியுங்கள். நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனிதருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ள வர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள். எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரி டத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம் பண்ணுங்கள்." (1 பேதுரு 2: 13-17). "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும் சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்" (தீத்து 3 : 1) வேண்டுமென பவுல் சொன்னார்.

இந்தியாவிலுள்ள சட்டங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அடிப்படையில், இந்நாட்டுச் சட்டங்கள் தேவனுடையவைகளாகும். எனவே கிறிஸ்தவன் இச்சட்டங்கள் குறித்து எந்நிலையை மேற்கொள்ள வேண்டும்? இந்த நாட்டுச் சட்டங்களுக்கு அவன் கீழ்ப்படிய வேண்டும். சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் ஒரு நல்ல பிரஜையாக அவன் இருக்க வேண்டும். பிறருக்கு முன்னுதாரணமாக அவன் நடக்க வேண்டும். சட்டங்களை மீறக்கூடாது. சிகப்பு விளக்கு எரியும் போது சாலைகளில் பிறர் கடந்து சென்றாலும், கிறிஸ்தவன் கடந்து செல்லக்கூடாது. அவனுடைய வரிகளை ஒழுங்காகச் செலுத்த வேண்டும். தேவனுடைய விருப்பத்திற்கேற்ற எல்லா சட்டங்களுக்கும் அவன் கீழ்ப்படிய வேண்டும். சட்டம் தேவை, அது அமுல்படுத்தப்படவும் வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒருபோதும் எந்த தொந்தரவும் கொடுக்கக்கூடாது, அபராதம் செலுத்தும்படி நடக்கக் கூடாது; சிறைக்குச் செல்லக்கூடாது.

நாட்டின் சட்டம் நமது நன்மைக்கும் பிறரின் நன்மைக்கும் ஏற்பட்டவை. சட்டங்கள் எதுவுமே இல்லையென்றால் என்ன நடக்கும்? நாம் அனைவரும் பயப்படுவோம். நமது உயிருக்கே ஆபத்து ஏற்படும். எனவே, சட்டங்கள்

இருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்; அவற்றை அமுலாக்குவோருக்கு நன்றி சொல்ல வேண்டும்; நம்மால் இயன்ற அளவு அவர்களுக்கு உதவ வேண்டும், ஜெபிக்க வேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனுடைய பரிசுத்தமான சட்டங்கள் நமக்கும், உலகத்திற்கும் நன்மைக்காக ஏற்பட்டவை. நாம் மனந்திரும்ப வேண்டுமென்று, அல்லது சகல கெட்ட காரியங்களிலிருந்தும் திருந்திஅவருக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று, கர்த்தர் கேட்கிறார். பின்னர் கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்தமாகவும், தெய்வ பக்தியுள்ளவர்களாகவும் வாழ வேண்டும். இந்த நாட்டின் குடிமக்கள் அனைவரும் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்கவில்லை. ஆனால் கீழ்ப்படிந்திருப்பவர்கள் அனைவரும் நல்ல பிரஜைகளாக இருக்கின்றனர் என்பதில் நீங்கள் நிச்சயமாக இருக்கலாம்.

தேவனுடைய சட்டங்கள் பற்றியும், நாட்டின் சட்டங்கள் பற்றியும் உங்களுடைய நிலை என்ன? நீங்கள் இச்சட்டங்களுக்குக் கீழ்ப்படிகிறீர்களா? கர்த்தருடைய அரசுக்கும் உங்களுடைய நாட்டிற்கும் ஆக இரண்டிற்கும் ஏற்ற நல்ல குடிமக்களாக நீங்கள் இருக்கிறீர்களா? இவை இரண்டும் இணைந்து செல்லுகின்றன.

J.C.Choate

J.C.சோட்.

---

## ஆபிரகாமின் விசுவாசம்

தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்

தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான்.

(ரோமர் 4:20,21

பெண்கள் பகுதி

# "சபைக் கொள்கை"

ஆண்ட்ரூவும், ரேச்சலும் ஒன்றாக சேர்ந்து ஆராதனை செய்ததே கிடையாது. செயின்ட் மேரீஸ் என்ற பெரிய கட்டிடத்தில் அவர்களுக்கு திருமணமான நாளிலிருந்து துணிகளை துவைப்பதற்கும், வீட்டை சுத்தம் செய்வதற்குமே ஞாயிற்றுக் கிழமைகளை பயன்படுத்தி வந்தனர். ஆராதனைக்கென்று ஓரிடத்திற்குச் செல்வதென்பது அவர்களுக்கு வியப்பாக இருந்தது.

ஒரு நாள் நேரமாக அதே கட்டிடத்திற்குச் சென்று அங்கே பாதிரியார் மட்டும் இருக்கக் கண்டார்கள். தங்களை அவருக்கு அறிமுகப்படுத்தினதிற்கு பிற்பாடு ஆண்ட்ரூ தான் ஒரு கத்தோலிக்கன் என்றும், ரேச்சல் பேப்டிஸ்ட் சபையைச் சேர்ந்தவன் என்றும் கூறினான். அத்தோடு தங்கள் மகனை சரியான வழியிலே வளர்த்த வேண்டும், அதைப் பற்றி வேதத்திலே தாங்கள் வாசித்ததாகவும், அதுபற்றி சில கேள்விகள் கேட்க விரும்புவதாகவும் கூறினார்கள்.

உங்களுடைய மகனை கிறிஸ்தவனாக்குவதற்காக கொண்டு வந்தீர்களா? என்று பாதிரியார் கேட்டார்.

கிறிஸ்தவனாக்குவதா? ரேச்சல் கேட்டாள். "நாங்கள் அதுபற்றி வேதத்தில் வாசித்ததில்லையே. அப். 2ம் அதிகாரத்தில் பார்க்கும்போது சபையானது ஸ்தாபிக்கப்பட்டபோது மக்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள், அவர்கள் நல்ல வயதுடையவர்களாக இருந்தார்கள், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து நாங்கள் இனி என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து அறியுமளவுக்கு போதுமான வயதுள்ளவர்களாக இருந்தார்கள்."

பாதிரியார் மெதுவாக புன்னகைத்தார். "ஆனால் அந்த எளிய ஆரம்பத்திலிருந்து இப்போது காரியங்கள் மாறியுள்ளன. பல நூற்றாண்டுகளாக போதுமான அளவு சபையின் கொள்கைகள் போப்புகளால் பேசப்பட்டு வந்தன. இவைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும், அத்தோடு பைபிளையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

"நான் குழம்பிப் போயிருக்கிறேன்" ரேச்சல் கூறினாள். வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள வார்த்தைகள்டங்கிய ஒத்த வாக்கியம் எங்களிடம் உள்ளது. "கத்தோலிக்க சபை" என்ற பெயர் ஏன் அதில் இடம் பெற்றது.

"பேதுரு என்பவரை அஸ்திபாரமாகக் கொண்டு பரிசுத்த மாதா சபை

ஆரம்ப நாட்களில் ஆரம்பிக்கப்பட்டது என்பதை நீ அறிய வேண்டும். ரோம் நாட்டிலிருக்கும் அந்த தலைமை சபைக்கு அவர் தான் முதல் போப் என்று பாதிரியார் கூறினார்.

பேதுருதான் அஸ்திபாரம் என்று சொல்லுகிறீர்கள், இயேசு கிறிஸ்து இல்லையா? பேதுருதான் சபைக்கு தலைவரா? வினவினான் ஆண்ட்ரூ.

"ஓ, ஆமாம்" என்று பாதிரியார் உறுதியாகக் கூறினார்.

" ஒரு மனிதன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்? ரேச்சல் கேட்டாள்.

இரட்சிப்பு என்பது ஒருவனை கிறிஸ்தவனாக்குவதில் ஆரம்பமாகிறது. அதாவது பரிசுத்தமான தண்ணீர் குழந்தையின் தலையில் தெளிக்கப்படுகிறது. அதன் மூலம் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்படுகிறான். அவன் பெரியவனாகும்போது வேதபாட வகுப்புகளுக்குச் சென்று சபையின் கொள்கைகளை கற்றுக் கொள்கிறான். அதன் பிறகு அவன் நற்கருணையில் கலந்து கொள்ளக்கூடிய தகுதியைப் பெற்றுக் கொள்கிறான்" என்று விளக்கினார் பாதிரியார்.

மற்றவர்களும் வந்து கொண்டிருந்தனர். "காலை வணக்கம் பாதர்" என்று அங்கி போட்டு கயிறு கட்டியிருக்கும் பாதிரியாரைப் பார்த்து கூறினார்கள். மக்கள் வரிசையாகச் சென்று அங்கு வைத்திருக்கும் மாதாவின் சிலையின் கீழ் உள்ள பீடத்தில் மெழுகுவர்த்திகளை கொழுத்தி சிலுவை அடையாளத்தை கைகளால் போட்டுக் கொண்டு மாதாவிடம் ஜெபம் செய்ததை ரேச்சல் மிகவும் வியப்புடன் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தநாள். ஆராதனை கூட சடங்குகள் நிறைந்ததாக இருந்தது. அநேகர் நற்கருணையில்" பங்குபெறுவதில் ஆர்வமாக இருந்தார்கள். ஒவ்வொருவரின் நாவிலும் பாதிரியார் மெல்லிய அப்பம் ஒன்றை வைத்து ஆசீர்வதித்தார்.

தொழுகை முடிந்து அனைவரும் சென்ற பின்பு ஆண்ட்ரூ பாதிரியாரிடம் சென்று 'சார்' என அழைத்தான்.

முழு மரியாதையுடன் தன்னை "பாதர்" என அழைக்கும்படி பாதர் குறுக்கிட்டார்.

"நான் வருந்துகிறேன், நான் உங்களை அவமதிக்கவில்லை. என்னால் சில காரியங்களை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏன் மக்கள் மெழுகுவர்த்தி பற்றி மேரியுடைய சிலையை வணங்குகிறார்கள்? அவள் கடவுள் அல்லவே. நாம் அனைவரும் மனிதர்களை வணங்கலாமா?

மாதா மேரியை வணங்குகிறோம் என கேட்கிறாயா? என்று சந்தேகத்துடன் கேட்டார். தூய மாதா, தேவத் தாய் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

"ஆனால், சார், அவள் தேவனின் தாய் அல்ல" என்று ரேச்சல் மறுத்துக் கூறினாள். "தானே தன்னைப் பற்றிக் கூறும் போது நான் தேவனால் உருவாக்கப்பட்டவள். அவருக்காக பணிபுரியும் ஒரு வேலையாள் என்று கூறுகிறாளே".

" சபையின் கொள்கைகளை நீ சரியாகப் புரிந்து கொள்ளவில்லை" என்று பாதிரியார் பதிலுரைத்தார்.

நீங்கள் "சுத்திகரிப்பு ஸ்தலம்" பற்றிப் பேசுகிறீர்கள். இல்லையா? அப்படியென்றால் என்ன என ஆண்ட்ரூ வினவினான்.

மரித்துப் போனவர்கள் இருக்கும் இடம் - நரகம் அல்ல. அது ஒரு வேதனை நிறைந்த இடம். மக்களின் பாவத்தை சுத்திகரிப்பு செய்வதற்காக அந்த இடம் உள்ளது. மரித்துப் போன ஒருவரின் உறவினரோ, நண்பரோ அவர்கள் ஆன்மாவிற்காக ஜெபம் செய்யும்படி பணம் கொடுத்து, பின்பு பாதிரியார் ஜெபம் செய்தவுடன் அவன் பரலோகம் செல்ல அனுமதிக்கப்படுவான். இன்னும் பல முக்கியமான கொள்கைகள் சபையைப் பற்றி உள்ளது. போப் அவர்களால் உறுதி செய்யப்பட்ட, காலங்காலமாய் கடைப்பிடித்து வரும் கொள்கைகளைப் பற்றி நீ கேள்வி கேட்கக் கூடாது" என்று பதிலுரைத்தார் பாதிரியார்.

வீட்டிற்குச் சென்று தங்களுடைய மதிய உணவை முடித்துவிட்டு மீண்டும் தங்கள் காலை அனுபவத்தைப் பற்றி விவாதித்தார்கள். ஆண்ட்ரூவும், ரேச்சலும். என்னால் எதுவும் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்றாள் ரேச்சல். சபையானது இயேசு கிறிஸ்துவுக்குச் சொந்தமானால், ஏன் பேதுரு அதற்கு அஸ்திபாரமாகவும், தலைவராகவும் இருக்க வேண்டும்? மத்தேயு 16 : 18ல் கூறியுள்ளதற்கு ஒத்த வாக்கியம் வேறு எங்காவது உள்ளதா எனப் பார்ப்போம் என்று கூறி எபேசி 2 : 20 எடுத்துப் பார்த்தார்கள்.

19ம் வசனப் பகுதியைப் பார்த்தால், "ஆகையால், நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்த வான்களாடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டிலுமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். "அஸ்திபாரம்" என்ற பதத்திற்கு மற்றுமோர் ஆதாரம் I கொரி : 3 : 11-ல் " போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போடஒருவனாலும் கூடாது".

கிறிஸ்துதான் சபைக்கு தலைவர் என்பதற்கு மற்றும் பல ஒத்த வாக்கியங்கள். எபேசியர் 1 : 23-ல் சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்". "4 : 15-ல் "தலையாகிய

கிறிஸ்துவுக்குள்", 5 : 23-ல் "கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்ககிறது போல" கொலோசேயர் 1:18-ல் "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்". இவை எவற்றிலும் சபைக்குத் தலைவர் பேதுரு என்று கூறப்படவில்லை. போப்பைப் பற்றியும் இவைகளில் நாம் காணவில்லை என்று ஆண்ட்ரூ கூறினான். இயேசுவே சபைக்கு தலைவராக இருந்து, சபை என்ன செய்ய வேண்டும் என்றெல்லாம் கூறியிருக்க புதிய ஏற்பாட்டில் கூறியிராத வேறு சபைக் கொள்கைகளை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றும் கூறினான் ஆண்ட்ரூ.

சபையானது ஸ்தாபிக்கப்பட்ட அந்த நாளில் அப்போஸ்தலர்களால் பிரசங்கிக்கப்பட்ட இரட்சிப்பை பற்றி பாதிரியார் எதுவுமே அறிந்திருக்கவில்லை. 'சுத்திகரிப்பு ஸ்தலம்' பற்றி வேதாகமத்தில் ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா ஒத்த வாக்கியத்தில் அந்த வார்த்தை இடம் பெற்றுள்ளதா? என ரேச்சல் கேட்டாள்.

மற்றொரு காரியமும் என் மனதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நான் சிறு வயதாய் இருந்த போது கேள்விப்பட்ட பைபிள் கதைகளில் தன்னுடைய மக்கள் ஒருபோதும் விக்கிரகத்தை வணங்கக்கூடாது என்று சொன்னது ஞாபகம் வருகிறது. விக்கிரக ஆராதனையினிமித்தம் அவர்கள் பெரிய பல பிரச்சனைகளை சந்தித்தார்கள். மாதா, ஏசு, மேலும் மற்ற அப்போஸ்தலர்களின் சிலைகளை வைத்து தொழுகை செய்து, அவைகளை வணங்குவது சரியான செயல் ஆகாது. தேவன் ஒருவரே, வேறு சிலை வழிபாடு கூடாது என்று தேவன் சொல்லியிருப்பது எனக்குத் தெரியும் என்று கூறினாள்.

எனக்கும் சில காரியங்கள் நினைவிற்கு வருகிறது என்று சொல்லி ஆண்ட்ரூவும் வேதாகமத்தை எடுத்து மத் 23 : 9ஐ எடுத்து வாசித்தான். "பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள், பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார்".

நாம் வேதாகமத்தில் வாசிப்பவைகளுக்கும், பாதிரியார் கூறுகிறவைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகிறது. நாம் என்ன செய்வது? என்று ரேச்சல் வினவினாள்.

நாம் இருவரும் தொடர்ந்து படித்து காரியங்களைத் தெரிந்து கொள்வோம். கத்தோலிக்க சபையில் இருக்க விரும்பினால் குழந்தைகளைப் போல கிறிஸ்தவர்களாக மாறி, பிறகு வேத பாடங்களைப் படித்து அதில் சேர வேண்டும். கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்துவில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமானால் நாம் உண்மைக் கிறிஸ்தவர் செய்த காரியங்களைச் செய்ய வேண்டும். வசனத்தை விசுவாசித்து மனந்திரும்பி, பிறகு ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். பிறகு தேவன் நம்மை இரட்சிப்பார். ஏனென்றால் அவர் நம்மை இரட்சிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்.

Betty Burton Choate (தொடரும்) Racheal Rajanayagam

# நான் ஏன் கிறிஸ்துவின் சபையிலிருக்கிறேன்?

நான் ஏதோவொரு மதரீதியான அமைப்பில் உறுப்பினனாக இருப்பதைவிட பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையிலானமைப்பு ஒன்றில் இருப்பதையே விரும்புகிறேன். ஏனெனில் பெரும்பாலான அமைப்புகள் மனிதக் கோட்பாடுகளினடிப்படையிலானவைகளாகவே இருக்கின்றது.

நான் ஏன் கிறித்துவின் சபையிலிருக்கிறேன் என்பதற்கு அநேக உறுதியான காரணங்களுண்டு அவை:

1. அப்போஸ்தலர்களுடைய காலத்திலிருந்து 3 நூற்றாண்டுகளாக பரிசுத்த வேதாகமமேயல்லாமல் வேறொரு மனிதக் கோட்பாடுகள் எதுவும் ஏற்படவேயில்லை.

சபை குறிப்பேடுகள் (church manual) என் கரத்தில் இருப்பதை விட பரிசுத்த வேதாகமம் (bible ) என் கரத்திலுருப்பதையே நான் அதிகமாக விரும்புகிறேன்.

2. பரிசுத்த வேதாகமம் நம்மை சகல நற்கிரியையும் செய்ய தகுதிப்படுத்துகிறது. அதுவே அதனுடைய உன்னதமான நோக்கம் பேதுரு 1:3, "அவருடைய திவ்ய வல்லமையானது, ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவரை அறிகிற அறிவினால் மகிமையாகவும் காருண்யமாகவும் தருகிறது.".

முழுமையானது (bible) நம்மிடம் இருக்கும் போது குறைவான (fallible) மனிதக் கோட்பாடுகள் நமக்குத் தேவையற்றது.

3. மனிதக் கோட்டுபாடுகள், எப்பொழுதுமே பிரிவினையை தூண்டக்கூடியவை (1 கொரி 1:10) மனிதக் கோட்பாடுகள் யாவும் சில ஆண்டுகளில் மீண்டும் திருத்தியமைக்கப்படுகிறது. காரணம் அவைகள் முழுமையானவைகள் அல்ல. ஒவ்வொரு 10 ஆண்டுகளிலும் திருத்தப்படுகிறது. ஆனால் தேவனுடைய கொள்கைகள் மாற்றபடாமல் உறுதியாக இருக்கிறது. "சுயாதீனப் பிரமாணமாகிய பூரண பிரமாணம்". (யாக் 1:25)

பெஞ்சமின் பிராங்ஃளின் ஒரு முறை சொன்னார் "முதலாவதாக எந்த கொள்கையாவது பரிசுத்தவேதத்திலிருந்து குறைக்கப்பட்டிருந்தால், அதுவும் ஏற்றுக்கொள்ள முடியாது காரணம் மூன்றாவதாக, எந்தக் கொள்கையாவது

வேதத்திலிருந்து வேறுபட்டிருந்தால் அதுவும் வேண்டாம். ஏனெனில் வேதத்திலிருந்து வேறுபட்டிருக்கிறது.

நான்காவதாக, எந்தக் கொள்கையாவது வேதத்தைப் போலவே கொடுக்கப்பட்டாலும் அதுவும் சரியல்ல காரணம் நமக்கு பரித்த வேதாகமமே இருக்கிறது என்றார்.

வேதம் எச்சரிக்கிறது தேவ வசனத்தோடு மனிதக் கொள்கைகளை கலப்படம் *செய்யாதே! (கலாத் 1:6-9; வெளி 22:18,19 உபா 4:2)*

முடிவாக ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து 1829 ஏப்ரல் 13ந் தேதி "ராபர்ட் டேல் ஓவன்", என்ற நாஸ்திகனும் கிறிஸ்தவத்தின் எதிரியுமான ஒருவன் அமெரிக்காவுக்கு போய், கிறிஸ்தவர்களே! நீங்கள் என்னுடன் தர்க்கம் செய்ய வரமுடியுமா என்று கோலியாத்தைப் போல சவால் விட்டான். எந்தவொரு நாமகரண (dinomination) கூட்டத்து போதகனும் அவனுடன் விவாதம் செய்ய துணியவில்லை காரணம் அவர்களுக்குத் தெரியும் அவர்களுடைய கொள்கைகள் பலவீனமானவை, மனிதக் கொள்கைகள் என்று. ஆகவே யாரும் முன்வரவில்லை. அந்தச் சமயத்ததில் ஒரு கிறிஸ்துவின் சபை உறுப்பினர் மட்டும் இந்த மனிதனோடு விவாதம் செய்ய முன் வந்தார். இந்த விவாதம் "சின்சினாட்டி" என்ற இடத்தில் ஆரம்பமாகி 8 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியில் கோலியாத் விழுந்தான். கிறிஸ்தவம் வெற்றி பெற்றது. அதற்கு காரணமாயிருந்த அந்த உண்மை கிறிஸ்தவர்தான் "சகோ. அலெக்ஸாண்டர் கேம்பல்" அவர்கள்.

இன்றைக்கு ஒரு வேளை தேவன் புதிய ஏற்பாட்டு விசுவாச வெற்றி வீரர்களின் பட்டியல் வெளியிடுவாரயானால் அதில் நம்முடைய பெயர் இடம் பெறுமா?

*சிந்திப்போம்! செயல்படுவோம்!!*

*பரலோகம் நமக்கு அத்தியாவசியமானது!!.*

*உலகம் நமக்கு அனாவசியமானது!!*

*அனாவசியத்துக்காக அத்தியாவசியத்தை இழந்து போகாதே!*

சகோ. வே. தானியல் துரைராஜன்

# இயேசு : மோசேயைப் போல ஒரு தீர்க்கதரிசி உபா. 18 : 15

## ஒப்புமை

1. கன்னித்தாய்

*பார்வோன் குமார்த்தி மோசேயை தத்தெடுத்து வளர்த்தாள்.*

*கிறிஸ்து மரியாள் மூலமாக அற்புதமாக பிறந்தார்.*

2. இருவரும் இஸ்ரவேலரே

*தீர்க்கதரிசனம்*

*மேசியா தம் "சகோதரர்" மத்தியில் வந்தார், உபா. 18:15.*

3. இருவரும் இஸ்ரவேல் பிள்ளைகளிடம் அனுப்பப்பட்டார்கள்

*மோசே மீதியானிலிருந்து*

*கிறிஸ்து பரலோகத்திலிருந்து*

4. மீட்பு பணியை செய்யும்படி இருவரும் மேன்மையான அந்தஸ்தை விட்டுவிட்டார்கள்.

*மோசே பார்வோன் மாளிகையை விட்டார்.*

*கிறிஸ்து பரலோகத்தை விட்டார்.*

5. இருவரும் தள்ளிவிடப்பட்டனர்_ எபிரேயரால்

*" எங்கள் மீது உன்னை அதிகாரியாக வைத்தவன் யார்?" யாத். 2 : 14.*

*இயேசு தள்ளப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார்.*

6. இருவரும் தங்கள் ஊழியத்தை வெற்றியாய் முடித்தனர்.

*மோசே இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்தார்.*

*இயேசு தம்மை பின்பற்றுகிற எல்லோரையும் பாவத்திலிருந்து விடுவிக்கிறார்.*

7. இருவரும் அநேக அற்புத அடையாளங்களை செய்தனர்.

8. அற்புதங்கள் ஒன்று போலவே இருந்தன.

*மோசே தண்ணீரை இரத்தமாக மாற்றினார்.*

*இயேசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார்.*

9. சட்டத்தை நிறைவேற்றினார்கள் :

*சீனாய் மலை பகுதியில் 3000 பேர் மரித்தனர். யாத். 32 : 28*

*பெந்தெகொஸ்தே நாளில் 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர். அப். 2: 38 F*

10. இருவரும் தேவ செய்தியை மனுஷருக்கு கொடுத்தனர்.

*யோவா. 1 : 17, 18.*

11. இருவரும் மறுரூபமானார்கள்:

*மோசே சீனாய் மலையில், யாத். 34 : 29 - 30*

*இயேசு -மத். 17 : 2*

12. இருவரும் இஸ்ரவேலுக்காக மரித்தனர்,

*யாத். 32 : 32;*

*யோவான் 10 : 17.*

13. இருவரும் அந்நியரை மணந்தனர்:

*மோசே நேரடியாக எண். 12 : 1*

*கிறிஸ்து ஒப்புமையாக (அவருடைய மணவாட்டியான சபையில் புறஜாதிகள் ஒரு பாகம்),*

14. மோசே வனாந்தரத்தில் சர்ப்பத்தை உயர்த்தினார்.

*கிறிஸ்து தாமே சிலுவையில் உயர்த்தப்பட்டார், யோவான் 3: 14.*

15. இஸ்ரவேலர் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள்,

*I. கொரிந்தியர் 10 : 2*

*ஆவிக்குரிய இஸ்ரவேலர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகின்றனர், கலா. 3 : 27.*

16. மோசே வானத்திருந்து அப்பத்தை மக்களுக்குக் கொடுத்தார். யாத். 16 : 15.

*கிறிஸ்து - அப்பங்களையும் மீன்களையும் வனாந்தரத்தில் கொடுத்தார்.*

*ஒப்புமையாக ஜீவ அப்பம் அவரே, யோவான் 6 : 31, 49 FF*

17. இருவருடைய மரணத்திலும் தேவன் ஈடுபட்டார்.

*மோசே தேவனால் அடக்கம் பண்ணப்பட்டார். உபாகமம் 34 : 6.*

*கிறிஸ்து தேவனால் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். மாற்கு 16 : 6.*

*- தெரிந்தெடுக்கப்பட்டது*

# இச்சையடக்கம்

வேத வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சில சம்பவங்களை ஆராய்ந்து பார்க்கும்போது மனிதனின் உள்ளத்தில் தோன்றும் ஆசைகளையே இச்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசைகளில் நன்மையானவைகளும் தீமையானவைகளும் உண்டு. உள்ளத்தில் தோன்றும் துர்ஆசைகளை அடக்குவதே இச்சையடக்கம். ஆனால் இன்று உலகத்தின் நிலையை சிந்திப்போமானால் மனிதன் நன்மை செய்யும் ஆசைகளை அடக்கி தீமை செய்வதிலே தீவிரமாய் காணப்படுகிறான். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 3 : 12ல் நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை என்று கூறுகிறார். ஆசையே அழிவுக்கு காரணமாய் இருப்பதால் இச்சையடக்கம் மனுஷனுடைய வாழ்க்கையில் இன்றியமையாத இடம் பெற'வேண்டியது அவசியம். இச்சையடக்கம் இல்லாமற்போவதால் ஏற்படும் விளைவுகளை சற்று பார்ப்போமா.

தேவனாகிய கர்த்தர் ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி அதிலே பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணி தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சகத்தின் கனியையும் புசிக்கலாம். ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாவாய் என்று கட்டளை இட்டார். ஆனால் பிசாசு ஏவாளை சந்தித்து நீங்கள் சாவதில்லை நீங்கள் இதை புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்று ஏவாளின் உள்ளத்தில் ஆசைகளை ஏற்படுத்தியது. அப்பொழுது ஸ்திரீயானவள் அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு அதின் கனியை பறித்து புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். இச்சை இவர்களுடைய தெய்வ பயத்தை நீக்கியது. கீழ்படியாமைக்கும், பாவம் செய்யவும் தேவனுடைய சாபத்திற்கு ஆளாகி அவருடைய ஆசீர்வாதங்களை இழக்கவும் காரணமாயிருந்தது. அது மட்டுமல்ல, அப்போஸ்தலனாகிய பவுல் ரோ. 5 : 19 ல் ஒரே மனுஷனுடைய

கீழ்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டனர் என்றும், ரோ 5 : 12ல் ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்தது என்று கூறுகிறான். இன்றும் அனேகர் தேவ ஆசீர்வாதங்களை இழந்துபோக இச்சையும் ஒரு காரணமாயுள்ளது.

உலகத்தில் பெருகிவரும் விபசாரம் வேசித்தனம் இவைகளுக்கு இன்று அனேகர் அடிமையாகியுள்ளனர். இந்த துர்பழக்கத்தின் மீது ஏற்படும் ஆசையினால் ஒருவன் உழைத்து சம்பாதித்த அனைத்தையும் செலவழிக்கின்றான். தனது உடமைகள் அனைத்தையும் இழந்து ஒரு வேளை உணவுக்காக பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொ 6 : 18-ல் "வேசித் தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுய சரீரத்திற்கு விரோதமாய் பாவஞ் செய்கிறான்." என்று கூறுகிறான். ஆம்! இன்று உலகத்தையே அச்சுருத்தி கொண்டிருக்கும் மனித உயிர்கொல்லியான எய்ட்ஸ் என்னும் கொடிய வியாதி பரவ மனிதனுடையயுள்ளத்தில் ஏற்படும் அருவருக்கத்தக்க துர்ஆசையே காரணமாயுள்ளது. சாலமோன் ஞானி கூறுகிறார் உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே. வேசியினிமித்தம் ஒரு அப்பத் துணிக்கையையும் இரக்க வேண்டியதாகும்; விபச்சாரியானவள் அருமையான உயிரை வேட்டையாடுகிறாள் என்றும் ஸ்திரீயுடனே விபசாரம் பண்ணுகிறவன் மதி கெட்டவன்; அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்து போடுகிறான். நீதி 6 : 25, 26, 32. அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொ. 6 : 19ல் "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலையமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்கள் அல்லவென்றும் அறியீர்களா? என்று கூறும் சத்தியத்தை சற்று சிந்தித்து செயல்படுவதே சிறந்தது.

பணம் மனுஷனின் வாழ்க்கையில் மிகவும் அவசியமானதாக உள்ளது. சாலமோன் ஞானி பிரசங்கி 10 : 19ல் "பணமோ எல்லாவற்றிற்கும் உதவும் என்று கூறுகிறான். பணம் சம்பாதிக்கும் விஷயத்தில் மனுஷனுக்கு போதும் என்ற மனம் வேண்டும். காரணம், வளர்ந்து வரும் நாகரீகத்திற்கு ஏற்ப மனுஷன் தன்னை மாற்றி கொள்ள நினைப்பதால் அவனுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு அவன் சம்பாதிக்கும் பணம் அவனுக்கு திருப்தியளிப்பதில்லை. எனவே போதும் என்ற மனமின்றி பண ஆசையுள்ளவனாகவே காணப்படுகிறான். பண ஆசையுள்ளவன் அதை சம்பாதிக்க பல தீய செயல்களில் ஈடுபடுகிறான்.. பணம் உடையவன் அதை

செலவழிக்க பல தீய செயல்களில் ஈடுபடுகிறான். " பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்தி கொண்டிருக்கிறார்கள். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும் மனுஷரை கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். உலகத்தில் மனுஷன் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை; இதிலிருந்து ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். எனவே இச்சையடக்கமுள்ளவனாய் உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்க கடவோம் என்று 1 தீ 6 : 7-1 வரையில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் சத்தியத்தை நாமும் ஏற்றுக் கொள்வோம்.

அன்புடனும் நட்புடனும் இருக்கும் மனித சமுதாயத்தில் யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது : மனுஷனுடைய அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? யாக் 4 : 1 மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் உலகத்தினாலுண்டானவைகள், உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம். 1 யோ 2 : 16 - 17". இச்சை பாவத்தின் வித்து" அப்போஸ்தலனாகிய யாக்கோபு கூறுகிறான்" அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் என்றும் இச்சையானது கர்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும் என்று யாக் 1 : 14-15.

ஆவியின் கனியான அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம் இவை அனைத்தும் இருந்தாலும் இச்சையடக்கம் இல்லையேல் இவை அனைத்தும் வீணாகும். எனவே நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடு பொறுமையையும் பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும் சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வாழுங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது. II பேது 1: 5-8.

தேவன்தாமே ஆவியின் கனியை உங்களில் பெருக செய்வாராக.

சகோ. நீலகிரி ஹென்றி மோகன்.

# ‘‘மீகா’’ தீர்க்கனின் புத்தகம்

| | | | |
|---|---|---|---|
| பெயரின் பொருள் | : | யெகோவாவைப் போல் யாருண்டு? | |
| காலம் | : | கி. மு. 725 | |
| யாருக்கு? | : | யூதாவுக்கும், இஸ்ரவேலுக்கும் | |
| பொருள் | : | யூதா, இஸ்ரவேலின் தண்டனை | |
| சிறப்பு | : | இயேசுவின் பிறப்பிடம் முன்னறிவிக்கப்பட்டுள்ளது | |
| புறக்குறிப்பு | : I | நியாயத்தீர்ப்பு | 1-3 அதி |
| | II | ஆறுதல் | 4-5 அதி |
| | III | இரட்சிப்புக்கான வழி | 6-7 அதி |

## இது தரும் பாடங்கள்

1. இருதயத்தில் உண்மையான நீதியில்லாமல், பக்தியாயிருப்பது போல் பாசாங்கு செய்வது பயனற்றது.
2. சட்டத்தின்படியிருந்தாலும் மனசாட்சியில்லாமல் ஈவிரக்கமற்ற முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்துவது தேவனை துக்கப்படுத்தும்.
3. தன்னுடைய வாழ்க்கையில் தேவபிரசன்னத்தை உணரும் ஒவ்வொருவருக்கும் தைரியம் தானாக வந்து சேரும்.
4. தேவன் கேட்பது நியாயமானது. தேவனின் எதிர்பார்க்குதல் மாறாதது தேவ அன்பு மென்மையானது.
5. ஒருவிசுவாசியின் வாழ்க்கையும், வாயின் வார்த்தையும் ஒத்துப் போக வேண்டும்.
6. பயபக்தியற்ற வாழ்க்கையோடு கூடிய சரியான ஆராதனையும், கொள்கையும் அர்த்தமற்றது.

EZSR

# நீ ஏன் ஜெபிக்க வேண்டும்?

ஒரு சிற்றுண்டிச் சாலையில் தன்னருகே அமர்ந்திருந்தஒரு முதியவரை கவனித்துக் கொண்டிருந்தான். தன் அம்மாவிடம் திரும்பி, "அங்கே பாருங்கள் அந்த மனிதர் தன்னுடைய சாப்பாட்டுத்தட்டுடன் பேசிக் கொண்டிருக்கிறார்!" என்றான். அந்தப் பையன் இதுவரைக்கும் ஒருவர் தலையைத் தாழ்த்தி ஜெபிப்பதை பார்த்ததில்லை போல் தெரிகிறது. ஜெபத்தைப் பற்றி அறியாத ஒரு சிறுவனுக்கு கண்களை மூடி, தலையைத் தாழ்த்தி இருப்பது விநோதமாக இருக்கிறதென்று கருதுகிறேன்.

நாம் வாழும் உலகம், மாம்ச சிந்தையால் அதிகமாக நாட்டம் கொண்டு, மார்க்க காரியங்களில் அக்கறையில்லாமலிருப்பதால், ஒரு வேளை ஜெபம் என்பது அவசியமற்ற, காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாக இருக்கலாம். ஆனால், ஜெபிப்பதற்கு நல்ல காரணங்கள் உண்டு. ஜெபம் உங்கள் வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும். ஆகவே, ஏன் நீங்கள் ஜெபிக்க வேண்டுமென்று சிலவற்றைப் பார்க்கலாம்.

## ஜெபம் நம்மை தாழ்மையாயிருக்கச் செய்யும்

நாம் எவ்வளவு பெலவீனர்களாகவும், சார்புள்ளவர்களாகவும் இருக்கிறோமென்பதை உணர்வது கடினம் என கருதுகிறேன். நான் இந்தக் கட்டுரையை கம்ப்யூட்டரில் எழுதிக் கொண்டிருக்கிறேன். அந்த சாதனம் மின்சாரம் இல்லாமல் இயங்காது. உண்மையில், மின்சாரம் இல்லாமல் பயன்படுத்தக் கூடிய பொருள்கள் எதுவும் அதிகமாக என்னுடைய வீட்டில் இல்லை. என்னுடைய வீட்டுக் காரியங்களை நடத்துவதற்கு, வெளியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தை நான் முழுமையாக சார்ந்திருக்கிறேன். நான் பலசரக்கு கடைக்குப் போய் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு வாகனங்களை சார்ந்திருக்கிறேன். எனக்கு வேலையும், வருமானமும் கிடைப்பதற்கு, பொருளாதார நிலையை சீர் செய்வதற்கு நிறுவனங்களை சார்ந்திருக்கிறேன். நான் யாரையும் சாராமல், எல்லா வகையிலும் போதுமானவனாக இருக்கிறேன் என்று சொல்லி நம்மை நாமே ஏமாற்றப் பார்க்கிறோம். ஆனால், அது உண்மையல்ல. நாம் வாங்கும் எரிபொருளிலிருந்து நாம் சாப்பிடும் உணவு பொருள்கள் மற்றும் பார்க்கும் தொலைக்காட்சி வரை எல்லாமே ஏராளமானவர்களின் முயற்சி மற்றும் உழைப்பிலிருந்து வருகிறது.

இந்த உண்மையை ஜெபம் நமக்கு நினைவூட்டுகிறது. இயேசுக் கிறிஸ்து உபதேசித்தபடி நாம் எந்தளவுக்கு ஜெபிக்கிறோமோ அந்தளவு நாம் மற்றவர்களை சார்ந்திருக்கிறோமென்பதை புரிந்துகொள்கிறோம். "அதற்கு அவர்: நீங்கள் ஜெபம் பண்ணும்போது, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக; எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்; எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும். நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களை சோதனைக்கு உட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் என்று சொல்லுங்கள் என்றார். (லூக். 11 : 2-4). நம்முடைய பெலவீனங்களையும், தேவைகளையும் ஒத்துக் கொள்கிற அளவிலே தான் இயேசு ஜெபத்தை கற்றுக் கொடுத்தார். நம்முடையஅன்றாட ஆகாரத்திலிருந்து ஆவிக்குரிய தோல்வி வரை, தேவனுக்கு நம்மை சார்ந்திருக்கச் செய்வதிலிருந்து, மற்றவர்களோடு நமக்கிருக்க வேண்டிய உறவு வரையிலான நம்முடைய தேவைகள் அந்த ஜெபத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

நீ ஏன் ஜெபிக்க வேண்டும்? ஏனெனில், உன்னுடைய வாழ்க்கை ஒன்றுமில்லாதது என்பதை அது நினைவூட்டும். உன்னுடைய வருமானம், உன்னுடைய சரீர சுகம், உன்னுடைய குடும்பம் ஆகிய இவை எந்த நிமிஷம் வேண்டுமானாலும் இல்லாமற் போகலாம். நீ ஜெபிக்கும் போது இவைகளை உனக்கு நினைப்பூட்டுகிறாய். உலகம் நம்மை மையமாகக் கொண்டிருக்கவில்லையென்பதையும், உன்னுடைய சக்திக்கும், திறமைக்கும் அப்பாற்பட்ட காரியங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்பதையும் ஜெபம் உனக்கு நினைவுபடுத்தும். ஆகவே, ஜெபம் நம்மை தாழ்மையாயிருக்க உதவி செய்யும்.

## ஜெபம் பிரச்சினைகளை புறம்பே தள்ளும்

இயேசுவின் மாதிரி ஜெபம், "எங்களை சோதனைக்கு உட்படப் பண்ணாதேயும்" என்ற வாசகத்தை உள்ளடக்கியுள்ளது (லூக். 11 : 4). தான் கைது செய்யப்படுவதற்கு முன்பாக, இயேசு அதிக நேரத்தை ஜெபத்திற்கு செலவிட்டார். தான் தனியே ஜெபிக்கும்படியாய், சீடர்களை விட்டுப் பிரிந்து போனபோது, "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள்" என்றார். (லூக். 22 : 40). நல்ல முடிவுகளை எடுப்பதற்கு ஜெபம் உதவி செய்யும் என்பது இயேசுவுக்குத் தெரியும். மோசமான தெரிந்துகொள்ளுதலைத் தவிர்ப்பதற்கு, ஜெபம் ஜனங்களுக்கு

நினைப்பூட்டினதென்பதையும் அவர் அறிந்திருந்தார். இன்னும், நல்ல ஜனங்கள் நன்மை செய்வதற்கு, ஜெபம் நினைப்பூட்ட முடியுமென்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது.

நீங்கள் ஜெபிக்கும்போது, நல்ல காரியங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் தீய காரியங்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் உங்களுக்கு நீங்களே நினைப்பூட்டிக் கொள்கிறீர்கள். பெற்றோர்களுக்கு ஜெபம் ஒரு நல்ல ஆயுதமாக இருக்க முடியும். பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையின் முடிவுகளை எடுக்கும்போது ஜெபித்து எடுக்கும்படியாய் போதிக்க வேண்டும். தேவனோடு ஜெபத்தில் பேசிவிட்டு பிறகு யாரால் பொய் சொல்ல முடியும்? தன்னுடைய மனைவியை ஆசீர்வதிக்கும்படியாய் ஜெபித்துவிட்டு யாராவது விபச்சாரம் செய்வார்களா? தேவனே, எனக்கு உதவி செய்யும் என்று சொல்லி விட்டு யாராவது குடிப்பார்களா?

ஜெபம் பிள்ளைகளுக்கு மாத்திரம் உதவி செய்யாமல், பெரியவர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும் உதவும். உங்களுடைய நண்பருடனோ, கூட வேலை செய்கிறவர்களுடனோ வாக்குவாதம் செய்ய நேர்ந்தால், அதற்கு முன் நீங்கள் ஜெபித்திருந்தால் அது உங்களுக்கு பொறுமையாகவும், அமைதியாகவும் இருக்கும்படி செய்யும். ஒருவேளை, நீங்கள் அந்த நபரோடு சேர்ந்து ஜெபித்தால், நீங்கள் இருவரும் நியாயத்தைச் செய்யும்படியாகவும், "சோதனைக்குள் உட்பிரவேசியாமல்" இருக்ககும்படியாகவும் நினைப்பூட்டப்படுவீர்கள்.

## ஜெபம் தேவனுடைய மனதை மாற்றும்

ஜெபத்தின் வல்லமை குறித்து இயேசு ஒரு அருமையான உவமையைச் சொல்கிறார். ஒரு வழிப்போக்கன் ஒருவனுடைய வீட்டிற்கு நடு ராத்திரியிலே வருகிறான். வீட்டுக்காரனிடத்தில் அப்பம் இல்லாதபடியால், அயலானுடைய வீட்டுக் கதவைத் தட்டி பாதி ராத்திரியாக இருந்தாலும் அப்பம் கடனாகத் தரும்படி கேட்டான். "பின்பு, தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினிமித்தம் எழுந்து, அவனுக்கு கொடாவிட்டாலும், தன்னிடத்தில் அவன் வருந்திக் கேட்கிறதினிமித்தமாவது எழுந்திருந்து, அவனுக்கு தேவையானதைக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக் 11 : 8). ஒரு எளிமையான உண்மையை இயேசு இங்கே சொல்கிறார். நம்முடைய தேவைகளை தொடர்ந்து நாம் அவரிடத்தில் விண்ணப்பித்துக் கொண்டிருந்தால், நமக்குச் செவி கொடுக்கும்படியாய் அவருடைய இருதயத்தை மாற்றமுடியும். வேறு எதற்காக இல்லாவிட்டாலும், நாம் தொடர்ந்து கேட்பதினிமித்தம் தேவன் அந்தக் காரியத்தை நமக்குச் செய்வார்.

இயேசு இதை எப்படிச் செய்ய வேண்டுமென்றும் போதிக்கிறார். "மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது : கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" (11 : 9). ஜெபம், உண்மையாகவே தேவனுடைய மனதை மாற்றமுடியும். தொடர்ந்து நாம் கேட்டால், நம்பிக்கையோடு கேட்டால், அவர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். நாம் தேடுகிற உதவியைப் பெற்றுக் கொள்ள முடியுமென்று இயேசு வாக்களித்துள்ளார்.

பழைய ஏற்பாட்டுச் சம்பவம் ஒன்று இக்கருத்தை விளக்குகிறது. நீ உன்னுடைய வியாதியிலே செத்துப்போவாய் என்று எசேக்கியா ராஜாவுக்கு ஏசாயா தீர்க்கதரிசி சொன்னான். ஆனால், எசேக்கியா இங்கே ஜெபிக்க முடிவெடுத்தார். "ஆ, கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம் பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்" (II ராஜா. 20 : 3). தேவன் என்ன செய்தார்? தன்னுடைய மனதை மாற்றினார். தேவன், ஏசாயாவை வித்தியாசமான செய்தியோடு, எசேக்கியாவிடம் அனுப்பினார். ".... உன் விண்ணப்பதைக் கேட்டேன். உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ நான் உன்னை குணமாக்குவேன், .... உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்" (20 :5-6). இதிலிருந்து தேவனுடைய மனதை ஜெபத்தினால் மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு என்பது தெளிவாகத் தெரிகிறது.

## ஜெபம் நம்மை மாற்றும்

எசேக்கியாவின் ஜெபத்தைப் போலவே இயேசு ஒரு ஊக்கமான ஜெபம் செய்தார். தன்னுடைய சீடர்களை ஜெபிக்கும்படி எச்சரித்ததற்குப் பிறகு, அவர்களை விட்டுக் கல்லெறி தூரம் அப்புறம் போய், முழங்கால் படியிட்டு : பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். (லூக். 22 : 41, 42). அப்பொழுது, மிகக் கடுமையான சோதனையை இயேசு எதிர் கொண்டார். அவர் கைது செய்யப்பட்டு, பொய்யாக நியாயந் தீர்க்கப்பட்டு, சிலுவையிலறையப்பட வேண்டியிருந்தது. தான் கடக்க வேண்டிய பாதையைக் கண்டு பயந்தார். தனது முடிவை மாற்றும்படி தேவனிடம் விண்ணப்பம் பண்ணினார். ஆனால், தேவனுடைய முடிவுக்கு விட்டுவிட்டார். தேவன் தன்னுடைய முடிவை மாற்றமில்லை.

தேவனிடத்தில் நாம் கேட்டும், நாம் கேட்பவைகளை, தேவன் கொடுக்காத சந்தர்ப்பங்கள் உண்டு. இது நம்முடைய நிலையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடாது. ஏனெனில் இயேசுவைப் போல், நம்முடைய அணுகுமுறையில் நேர்மையாக இருந்தும், எதிர்மறையான பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும். நமக்கு எது தேவையென்பது தேவனுக்குத் தெரியுமாகையால், அதை ஏற்றுக்கொள்ள மனமுடையவர்களாக இருக்க வேண்டும். நாம் எதிர்பார்க்கும் பதில் நமக்கு கிடைக்காவிட்டால் கூட, ஜெபம் நம்மை மாற்றக் கூடுமாகையால் ஜெபம் நமக்கு நல்லதே. "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்". (லூக். 22 : 43). இயேசு கடுமையாக ஜெபித்தார், இருப்பினும் தேவன் "இல்லை" என்ற பதிலையே தந்தார். ஆனால், தேவன் அவரை வெறுமனே கைவிடவில்லை, நம்மையும் கைவிடமாட்டார். "இல்லை" என்ற நிலையிலும் தேவன் நம்மைக் கட்டி, பெலப்படுத்தி ஆசீர்வதிக்கும் வழியைக் கண்டு பிடிக்க முடியும். நம்முடைய தைரியத்தோடே சந்திக்கும்படியாய் நம்மை மாற்ற முடியும். வியாதியிலிருந்து கொண்டு விடுபட முடியாமல் பாடுபடுகின்றவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், ஜெபத்திற்குப் பிறகு தங்களுடைய வேதனைகளுக்கு மத்தியிலும் அவர்கள் அமைதியும், சாந்தமுள்ளவர்களாக மாறுகின்றனர். நீ கேட்கின்ற எல்லாவற்றையும் தேவன் உனக்கு கொடாமலிருக்கலாம், ஆனால், நீ கேட்பவைகளில் உன்னை ஆசீர்வதிக்க முடியும். ஜெபம் நம்மை மாற்ற முடியும்.

## ஜெபம் தான் நமக்கு அடைக்கலம்

சமீப காலத்தில் எங்கள் நாட்டில் கொடிய வெள்ளம் வந்து ஆயிரக்கணக்கானோர் மடிந்துபோன துக்க நிகழ்ச்சி நடந்தது. பாதிக்கப்பட்டவர்கள் ஜெபம் தான் எங்களுக்கு வழி என்று சொல்வதை திரும்பத் திரும்ப கேட்டேன். நம்பிக்கையற்ற அரசியல்வாதிகள் தங்கள் தொகுதி மக்களை ஜெபிக்கச் சொன்னார்கள். இதுவரைத் தேவனைத் தேடாதவர்கள்கூட தேடும்படி நிர்பந்திக்கப்பட்டார்கள். ஏனெனில், அதைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலை. ஜெபத்தைத் தவிர வேறு வழியில்லையென்கிற சில சூழ்நிலைகள் வாழ்க்கையில் உண்டு.

ஆச்சரியமான காரியங்களை மருத்துவர்கள் இன்று செய்யக்கூடும். ஆனால், அவர்களுக்கு ஒரு எல்லையுண்டு. வியாதிகளை மருத்துவர்கள் குணப்படுத்த கஷ்டப்படும்போது, மக்கள் தேவனிடத்திற்கு திரும்புகிறார்கள். வேலைகள் இல்லாதபோதும், நிறுவனங்கள் நலிந்த போதும் ஜனங்கள் தேவனைத் தேடுகிறார்கள். திடீரென ஒரு பேரழிவு நேரும்போது ஜனங்கள் தேவனிடம் வருகிறார்கள்.

இயேசுவும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டார். பிசாசு பிடித்த ஒரு பையனை அவருடைய சீடர்கள் குணப்படுத்த முடியாமல் போனபோது, தங்கள் தோல்வியை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. எங்களால் அதைத் துரத்திவிட ஏன் முடியவில்லையென்று தனிமையில் இயேசுவிடம் கேட்டார்கள். அதற்கு அவர் : இவ்வகைப் பிசாசுகள் ஜெபத்தினாலும், உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்திலும் புறப்பட்டுப் போகாது என்றார். (மாற். 9 : 29). சீஷர்கள் தங்களுடைய சொந்தப் பலத்தைக் கொண்டு சிறு பையனை குணப்படுத்த முயற்சித்தார்கள். முயற்சியில் தோற்றுப் போன போது தேவ வல்லமையை நாடுவதைவிட வேறு வழியில்லாமல் போனது. இயேசு இதை அறிந்திருந்தார். அவர் அதிகாலையில் ஜெபித்தார். (மாற். 1: 35) பன்னிரண்டு அப்போஸ்தலர்களை தெரிந்தெடுப்பதற்கு முன் இரா முழுவதும் ஜெபித்தார் (லூக். 6: 12). அவர் பிடிக்கப்படுவதற்கு முன்பாக மூன்று முறை கெத்சமனே தோட்டத்தில் ஜெபித்தார். (மத். 26 : 44). ஜெபத்தைத் தவிர வேறொன்றும் செய்ய இயலாது என்ற சந்தர்ப்பங்கள் வாழ்க்கையில் வரும்.

## தேவனிடத்தில் இன்றே திரும்புங்கள்

சுவிசேஷத்தின் நற்செய்தியென்னவென்றால், மகத்தான இந்த தேவனிடத்தில் நீங்கள் பேசலாம். நீங்கள் கூப்பிட்டால் உங்களுக்கு செவி கொடுப்பார். " ..... நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தை தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று பவுலுக்குச் சொல்லப்பட்டது. (அப். 22 : 16). பவுல், தேவனுடைய நாமத்தைத் தொழுது கொண்டு, திருமுழுக்குப் பெற்று பாவங்களைப் போக்கிக் கொண்டார். நீங்களும் ஞானஸ்நானத்தில் தேவனை அழைக்கலாம். உங்களுடைய பாவங்களும் கழுவப்படும் என்ற நம்பிக்கையோடு அழைக்க வேண்டும். அதன் பிறகு, நாம் பார்த்த இம்மாதிரியான ஜெபங்களை நீங்களும் செய்யலாம். "ஆகையால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம். (எபி. 4 : 16).

இன்றே தேவனிடம் வாருங்கள், இன்றே தேவனிடம் ஜெபியுங்கள்.

David Thurman EZSR

## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8.45 P.M. - 9.00 P.M., Thursdays, 9.00 - 9.15 P.M Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, and Thursdays, 2.00 P.M. -2.15 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Speaker, P.R.Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K.Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/WO/ PP/5
Posted at Erode HPO on 20, July 98
July 98 THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27, காங்கயம்-638 701.

Published by Church of Christ Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor S. Rajanayagam

From
THE EDITOR
THIRUMARAI AASAAN
Post Box No. 27,
KANGAYAM - 638 701.
Ph: 04257-20030

PRINTED MATTER BOOK-POST

To